## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் ரூபா 373,351,128 ஆன வியாபாரக் | கடன்கொடுத்தோர் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்படாது இருந்ததுடன் கடன் | இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கடன்பட்டோர் மீதியில் ரூபா 11,906,646 ஆன பெற வேண்டிய மீதி ஈடுசெய்யப்படும். தேறிய பெறுமதியான ரூபா 361,444,482 செலுத்த வேண்டிய மீதியாகக் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய தொகை கொள்வனவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பொறுப்பாக கணக்கீடு செய்யப்படுகின்றது. கொள்வனவு மீள அனுப்புதல் மற்றும் முற்பணம் கடன் கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய மீதிகள் அவற்றைக் கழித்து (வரவு) கணக்கீடு செய்யப்படுகின்றது. மிகுதி முற்பணம் அதன் பின்னர் எதிர்காலத்தில் முற்பணம் வழங்குகின்ற சந்தர்ப்பத்தின் போது அதனை தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் ஈடு செய்யாமல் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 16 ஆம் பந்திக்கு முரணாக நிலையான வைப்பு மற்றும் ஏனைய குறுங்கால வைப்புக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய முதலீடு ரூபா 315,088,866 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நிதி செயற்பாடுகளின் கீழ் உருவான காசு பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது அரசாங்க மானியங்களுக்கு உரிய பிற்போட்ட வருமானம் ரூபா 24,437,682 இரு தடவை குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட வழுக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி எதிர்காலத்தில் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான வைப்பின் தேறிய முதலீடு, முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் இறுதி மீதி சரியாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் செயற்பாட்டு இலாப தன்மையில் தாக்கம் ஏற்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் பொருண்மையான முன்னைய காலப் பகுதியில் தவறுகள் பிற்போட்ட ரீதியில் சரி செய்ய வேண்டி இருந்ததுடன் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் பிழைகளை சரி செய்தல் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். எனினும் கம்பனியால் அந்த நியமத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக முன்னைய ஆண்டின் அரிசி இறக்குமதிக்கு உரிய நாணய மாற்று இலாபம் ரூபா 440,670,002 மற்றும் நாணய மாற்று நட்டம் 27,863,304 மற்றும் அந்த அரிசி இறக்குமதிக்கு உரிய செலவினம் மற்றும் இருப்பு இழப்பீடு கூட்டு மொத்தமாக ரூபா 23,869,693 மீளாய்வாண்டின் விற்பனை கிரயத்தில் முறையே செலவு மற்றும் வரவு வைக்கப்பட்டிருந்தது. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பாக சகல சீராக்கங்களும் மேற்கொண்டு உரிய சகல செலவினங்களும் மீளளிப்புச் செய்யு பூர்த்தி செய்யப்பட்டு அதற்குரிய இறுதிக் கொடுப்பனவு 2023.06.27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் அதற்குரிய ரூபா 440,670,002 ஆன கணக்கீட்டுக் குறிப்பு 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரிசி இறக்குமதிக்கு உரிய பொது திறைசேரிக்கு நடப்பாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 156,691,390 தொகைக்காக 2023/24 கணக்காண்டின் போது சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் ரூபா 27,863,304 ஆன அந்நிய செலாவணி மாற்றல் இலாபம் 2023/24 ஆண்டின் போது சீராக்கப்பட்டுள்ளது. | இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பொருண்மையான முன்னைய காலப் பகுதியின் தவறுகள் பிற்போட்ட ரீதியில் சரி செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்க வேண்டிய ரூபா 30,437,267 ஆன பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள், நடைமுறையல்லாச் சொத்துக்களில் குறைக்கப்பட்டு தேறிய பிற்போட்ட சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024/25 ஆம் ஆண்டு முதல் கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் நடைமுறை அல்லா பொறுப்பின் கீழ் தனியாகக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். சமர்ப்பிக்கும் போது ஏற்பட்டிருந்த இந்த வழுக்கள் இறுதி மீதியில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. | இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மானியங்களைக் கணக்கு வைக்கும் முறை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் 26 ஆம் | கணக்கீட்டுக் கொள்கை 2.2.18 இன் கீழ் அரசாங்க மானியங்களைக் கணக்கீடு செய்தல் இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டதுடன் அதன் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அரசாங்க மானியங்களைக் கணக்கு வைத்தல் மற்றும் |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் அரசாங்க மாணியங்களின் பெறுமதிக்குரிய சொத்துக்களில் பயன்தரு ஆயட்காலம் முழுவதும் ஒழுங்கு முறையாக மீளளிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்குரிய வருமானம் பிற்போட்ட வருமானமாக இனங்காண்பதற்குப் பதிலாக அந்த வருமானம் ரூபா 24,437,668 சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் பெறுமானத் தேய்வு செலவினம் அப்பெறுமானத்தால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | பிரகாரம் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசாங்க மானியம் கணக்கீடு செய்யும் முறை 2023/2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கும் எதிர்காலத்தின் போது கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்க மானியங்கள் பிற்போடுவதற்குரிய பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணக்கீட்டு சீராக்கங்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலாவதியான வைன் இருப்பிற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 4,285,347 மற்றும் அரசாங்க நிறுவனத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் 22 நெல் களஞ்சியங்களின் கிரயம் ரூபா 42,351,980 மீளாய்வாண்டில் விற்பனைக் கிரயத்தில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக மொத்த இலாபம் ரூபா 46,637,327 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காலாவதியான வைன் இருப்பை விடுவித்துக் கொள்வதற்காக இலங்கை சுங்கத்திற்கு இறுதியாக செலுத்துவதற்கு இணங்கியிருந்த ரூபா 4,285,347 தொகை 2023/24 ஆண்டின் போது அட்டுறு செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அரச நிறுவனத்திற்காக 2023/2024 ஆண்டின் போது இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட நடமாடும் நெல் களஞ்சியம் (Cocoon) இன் கிரயம் சந்தை இருப்பில் இருந்து அகற்றி விற்பனைக் கிரயக் கணக்கின் ஊடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | விற்பனைக் கிரயம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட இருப்பு மிகை மற்றும் சரி செய்தல்களின் கூட்டுமொத்தம் ரூபா 23,064,553 முன்னைய ஆண்டின் பிழைகள் சரிசெய்தலாக விற்பனைக் கிரயத்தில் கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் விற்பனைக் கிரயம் குறைத்தும், மொத்த இலாபம் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 23 மில்லியன் இருப்பு மெய்மையாய்வு பகுப்பாய்வின் வேறுபாடாக இந்த ஆண்டின் விற்பனைக் கிரயத்தில் இருந்து குறைக்கப்பட்டிருந்த மீதியினைக் கவனத்தில் கொள்ள வேண்டிய கிரயம் ஒன்று முன்னைய ஆண்டின் விற்பனைக் கிரயத்தில் சேர்க்கப்பட்டிருந்த அரிசிக்காக இருப்பு உள்ளபடியான பகுப்பாய்வின் வேறுபாடு சரி செய்தல் ஆகும். | விற்பனைக் கிரயம் சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2017 முதல் 2024 வரையான காலப் பகுதியில் வெளித்தரப்பினரால் வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 2,820,094 நேர் வைப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வெளித் தரப்பினரால் வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்ட நேரடி வைப்புக்களை இனங்கண்ட பின்னர் பெறுவனவு உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பித்து வைப்புக்கள் தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்திய பின்னர் பெறுவனவுகளை தீர்த்து வைக்கப்படுகின்றது. அது வரை தற்காலிகமாக ஏனைய கடன் கொடுத்தோர் கணக்கில் காண்பிக்கப்படுகின்றது. ஏனைய கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ள ரூபா 1,045,500 தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையால் அது முடிவடைந்த பின்னர் உரிய தரப்பினரிடம் இருந்து கிடைக்க வேண்டிய தொகை ஈடு செய்யப்படும். மிகுதி மீதி பெறுவனவு உறுதிச் சீட்டுக்கள் விநியோகித்து உரிய பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நேர் வைப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | மட்டக்களப்பு ரஜவாச கட்டிடத்தின் ஒரு பகுதி லங்கா சத்தோச லிமிடட் நிறுவனத்திற்கு உப வாடகைக்கு வழங்கியதற்காக கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 7,279,191 ஆன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சதுர அடி 6400 தொகுதி ஒன்று லங்கா சதொச நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கியதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 7.2 மில்லியன் தொகை சத்தொச கம்பனியில் இருந்து இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. உணவு ஆணையாளர் | பெற வேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்திற்கு சொந்தமான சகல கட்டிடங்களும் சத்தொச நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த வாடகைப் பணம் சத்தொச நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளல் தொடர்பாக பிரச்சனை ஒன்று ஏற்பட்டிருந்தமையால் உப வாடகைக்கு வழங்கியதற்காக கம்பனிக்கு கிடைக்க வேண்டிய பணம் கணக்கீடு செய்யப்பட வில்லை. | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 822,322,109 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் 02 முதல் 05 வருடங்கள் வரையிலான பழைய ரூபா 133,352,935 மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 177,479,439 மீதியும் காணப்பட்டதுடன் அந்த கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. மேலும் ரூபா 1,272,905,763 ஆன ஏனைய பெற வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 13,421,973 அறவிடாத மீதியாகக் காணப்பட்டது. | தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள், தவணையாக அறவிடல், அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம், மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்புதல், சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அறவிட முடியாத கடன்பட்டோருக்காக செயற்பாட்டுக் கைநூலின் 6.9 இன் பிரகாரம் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற முறைகள் மூலம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட கடனை அறவிடல் தொடரபாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெற வேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மார்ச் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட முற்பணங்களின் பெறுமதி ரூபா 25,491,248 ஆக இருந்ததுடன் 03 | முற்பணங்கள் மற்றும் கடன்பட்டோர் மீதிகளின் பிரகாரம் இனங்காணல் மற்றும் தீர்த்து வைத்தல் | பெற வேண்டிய பணத்தை தாதம் இன்றி அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாது இருந்த முற்பண மீதிகளின் பெறுமதி ரூபா 7,837,353 ஆகும். | முற்பண உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் மற்றும் பதிலளிக்காத முற்பணங்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற முறைகள் மூலம் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் முற்பணங்களை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 361,444,482 ஆன கடன் கொடுத்தோர் மீதியின் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைக்கப்படாத மீதி ரூபா 90,514,335 ஆகும். மேலும் ரூபா 716,930,302 ஆன ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட நீண்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 15,789,605 மீதிகளும் சரியான தன்மையை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு கடன் கொடுத்தோர் கணக்கின் பிரகாரம் 2024.03.31 இல் உள்ளவாறு கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 361,444,482 ஆக இருந்ததுடன் கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையில் 2024.03.31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதியாக (கொள்வனவு மற்றும் மீள செலுத்துதல் கழிக்கப்பட்ட பின்னர் பெறுமதி) ரூபா 361,444,482 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக் கூற்றுக்கின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி செலவினம் | 86,942,743 | 83,347,166 | 3,595,577 | முன்னைய ஆண்டுகளுக்கு உரிய கொடுப்பனவுகள் உரிய ஆண்டில் சீராக்குவதற்கு மாதாந்த | சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி செலவினம் சரியாக கணக்கீடு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விற்பனையை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு வரியை இனங்கண்டு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | விற்பனைப் பெறுமதி | 12,132,029,706 | 12,643,327,250 | 511,297,543 | பெறுமதி சேர் வரி மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் விற்பனை மற்றும் கொள்வனவுகளுக்கு இடையே பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. | விற்பனைப் பெறுமதி சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | கொள்வன வுப் பெறுமதி | 9,796,491,313 | 3,733,542,154 | 6,062,949,159 | பெறுமதி சேர் வரி மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் விற்பனை மற்றும் கொள்வனவுகளுக்கு இடையே பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. | கொள்வனவுப் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலக்கம் PED 1/2015 என்ற 2015 மே 25 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 ஒக்தோபர் 05 ஆம் திகதிய இலக்கம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கும் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீளமைப்புக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக உரித்து இல்லாத நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்ட 42 உத்தியோகத்தர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் | தற்போது நிறுவனத்திற்குச் சொந்தமான வாகன ஒதுக்கம் போதியளவில் காணப்படாமையினால் பதவி நிலை உத்தியோகத்தர்கள் அநேகமானவர்கள் தனிப்பட்ட வாகனங்களின் அடிப்படையில் வாகன வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக பணிப்பாளர் சபை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்துப் படி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆந்த ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | PED/S/STC/03/ 11/(i) என்ற கடிதம் | சேர்க்கப்பட்ட 09 உத்தியோகத்தர்களுக்கும் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 2,711,750 மற்றும் ரூபா 972,500 மாதாந்த போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தின் அடிப்படையில் போக்குவரத்துப் படி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக திறைசேரி அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்ட பொது முயற்சிகளுக்கா ன செயற்பாட்டுக் கைநூலின் | | | |
| (i) | 3.2(i) ஆம் பந்தி | திறைசேரி அங்கீகாரம் இன்றி விழா மற்றும் ஊக்குவிப்புப் படியாக ரூபா 41,679,289 தொகை, மருத்துவ செலவின மீளளிப்பிற்காக ரூபா 3,846,978 மற்றும் மரணப் பணிக்கொடையாக ரூபா 700,000 ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்காக விழா மற்றும் ஊக்குவிப்புப் படி, மருத்துவ செலவினங்களை மீளளிப்புச் செய்தல் மற்றும் மரணப் பணிக்கொடை படிகள் செலுத்துதல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊக்குவிப்புப் படிக்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றும் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விழா மற்றும் ஊக்குவிப்புப் படி, மருத்துவ செலவின மீளளிப்பு மற்றும் மரணப் பணிக்கொடைப் பணிகள் செலுத்துவதற்கா க திறைசேரி அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப் பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |
| (ii) | 6.7 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 977,631,425 ஆன | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு 2017 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்படாது இருந்த போதிலும் 2023/24 ஆண்டிற்குரிய | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையான சொத்துக்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் பின்னர் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏதிர் காலத்தில் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பௌதீக மெய்மையாய்வு மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | 2005 மே 06 ஆந் திகதி இலக்கம் 415 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் (iii) ஆம் பந்தி | கப்பல் மூலம் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற சகல அரச நிறுவனங்களினாலும் பொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் வ/ப இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் ஊடாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் கப்பல் கூட்டுத்தாபனத்தின் கப்பல் கட்டணம் ஏற்றுமதியாளர்களின் கப்பல் கட்டணத்தை விட அதிகரிக்கின்ற போது அது தொடர்பாகக் காண்பிக்கப்படுகின்ற கைவிடல் அறிவித்தல் எழுத்து மூலம் பெற வேண்டியிருந்த போதிலும் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 18 சந்தர்பங்களில் 16 சந்தர்ப்பங்களின் போது வெளிநாட்டுக் கப்பல் கம்பனி ஊடாக இறக்குமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் அதன் போது கைவிடல் கட்டளை 02 சந்தர்ப்பங்களின் போது | இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கப்பல்கள் இல்லாது இருந்ததுடன் அவர்களினாலும் வெளிநாட்டுக் கப்பல் கம்பனிகளின் ஊடாக கப்பல் முகவராக நடவடிக்கை எடுத்து பொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்கின்றமையினா ல் நாட்டில் இருந்து அந்நிய செலாவணி வெளிச் செல்லல் நிறுத்த முடியாதிருந்தது. இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது இறக்குமதியாளர் மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தை தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியாக முன் நின்றதுடன் அதிக தாமதம் காணப்பட்டது. வெளிநாட்டு வழங்குனர்கள் அவர்களின் வருடாந்த ஏற்றுமதி அளவின் அடிப்படையில் கப்பல் கூட்டுத்தாபனத்தை விட | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுப்பதாயின் அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாத்திரமே பெறப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் அமெரிக்க டொலர் 22,479 தொகை வெளிநாட்டுக் கப்பல் கம்பனிகளுக்கு செலுத்தப் பட்டமையால் நாட்டில் அந்நிய செலாவணி வெளிச் செல்லல் இடம் பெற்றிருந்தது. | மிகவும் போட்டியுள்ள கப்பல் கட்டணம் வழங்குனர்களுக்கு பெற்றுக் கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,501,214,947 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 735,435,943 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 765,779,004 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் விற்பனைக் கிரயம் ரூபா 1,767,301,038 இனால் அதிகரித்து தேறிய நிதி வருமானம் ரூபா 142,304,439 இனால் குறைவடைந்தமை மற்றும் புது வருட படிகள் மற்றும் ஊக்குவிப்புப் படிகள் ரூபா 35,249,289 இனால் அதிகரித்து இருந்த போதிலும் கம்பனியின் தேறிய விற்பனை ரூபா 2,715,253,435 இனால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் 2015 ஆம் ஆண்டின் போது கிரயம் ரூபா 96,254,510 ஆன நெல் இருப்பை சேகரிக்கும் நடமாடும் களஞ்சியம் (Cocoon) 50 பிலிப்பைன்ஸ் இலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு அவற்றில் 15 அலகுகள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது. 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விற்பனை செய்யப்படாமல் காணப்படுகின்ற கிரயம் ரூபா 25,026,173 ஆன 13 அலகுகள் 2022 ஆம் ஆண்டின போதும் மற்றும் கிரயம் ரூபா 42,351,984 ஆன 22 அலகுகள் மீளாய்வாண்டின் போதும் அரச நிறுவனங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டமையால் ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் நட்டம் ரூபா 67,378,157 ஆக இருந்தது. | 2015 ஆம் ஆண்டில் விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட Cocoon 50 இல் 35 பல வருட காலமாக விற்பனை செய்யப்படாமல் காணப்பட்டமையும் நீண்டகாலமாக களஞ்சியத்தில் இடவசதிகளுக்காக ஒதுக்கப்பட்டதன் காரணமாக தொடர்ச்சியாக பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு, முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் Cocoon பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடிய நிறுவனங்களுக்காக CSR செயற்திட்டத்தின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு தேவையான தீர்மானம் எடுக்க வேண்டி இருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களில் எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியால் உணவு ஆணையாளர் திணைக்களத்தில் இருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த வெயாங்கொட களஞ்சியம் 2023 பெப்ரவரி முதல் 2024 பெப்ரவரி வரை விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் ரூபா 2,400,000 வாடகைத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2024.02.15 முதல் ஒரு வருட காலத்திற்காக வாடகை அடிப்படையில் உடன்படிக்கை செய்வதற்கு 2024.04.04 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் எமது கூட்டுத்தாபனத்தால் அரசாங்கத்திற்கு முன் நின்று மேற்கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை களஞ்சியப் படுத்துவதற்கா இந்த களஞ்சியம் தேவையான விடத்து பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட களஞ்சியத்தை எதிர்பார்த்த பணிகளுக்காக உச்ச அளவில் பயன்படுத்த வேண்டி இருந்ததுடன் விளைவற்ற செலவினங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மட்டகளப்பு ரஜவாச செயற்திட்டத்திற்காக 2021 செப்தெம்பர் முதல் 2023 யூன் வரை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரிய கட்டிடம் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டடத்தை நவீன மயப்படுத்துதல் 2024 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக எந்த ஒரு வருமானமும் உழைக்கப்படாது இருந்ததுடன் அந்த திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,720,000 வாடகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் மாதத்தின் பின்னர் வர்த்தக அமைச்சிற்குரிய நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் காரணமாக நவீன மயப்படுத்தல் செயற்திட்டத்தை முன் கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது. எனினும் அதில் சதுர அடி 6400 பகுதி ஒன்று லங்கா சத்தொச நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக சத்தொச கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானமான ரூபா 7.2 மில்லியன் தொகை இது வரை வழங்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே 2021 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் மாதம் வரை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு ரூபா 5.7 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் 2024 சனவரி மாதம் முதல் அந்த வாடகைத் தொகை செலுத்தப்படவில்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது சாத்திய வள ஆய்வு மேற்கொண்டு தேவையான தீர்மானம் எடுக்க வேண்டி இருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தில் எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது Q-Shop 08 விற்பனைச் சாலைகளில் வாசைன திரவியங்கள் | எமது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல Q-Shop கையேற்கப்பட்டமைக்காகவும் | செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு வாடகை உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் 03 கடைகளில் கணக்காய்வுத் திகதியான 2024 யூலை 25 ஆம் திகதி வரையில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ரூபா 920,000 வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் விளைவற்றுக் காணப்பட்ட அந்த 03 கடைகளுக்காக வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்ட ரூபா 480,000 வாடகை பயனற்ற செலவினமாக இருந்தது. இந்த Q-Shop செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,658,668 நட்டம் பெறப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபன உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் கெஸ்பாவ, தலங்கம மற்றும் மத்தேகொட திறப்பதற்கு தாமதம் அடைந்திருந்தது. கெஸ்பாவ கடை 2024 மார்ச் வரையிலும் திறக்கப்படாது இருந்ததுடன் வாசனைப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தால் அதன் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொளளப்படாமையால் மீண்டும் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் கெஸ்பாவ, மத்தேகொட மற்றும் தலங்கம விற்பனைக் கடைகள் வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக 2024.06.13 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் ஆர்வம் உள்ளவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்று அந்த விற்பனைக் கடைகளை மீண்டும் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிறைவேற்றுவதற்கும், இலாப தன்மையை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மார்ச் 31 இல் உள்ளவாறு களஞ்சியத்தில் காணப்பட்ட கிரயம் ரூபா 685,725,364 ஆன இருப்பில் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் அசைவுறாத இருப்புக்களின் பெறுமதி ரூபா 155,109,130 ஆக இருந்ததுடன் இந்த இருப்புக்களுக்கு இடையே காலவதியாவதற்கு அண்மித்த இருப்பை இனங்காண்பதற்கு பொருத்தமான திட்ட முறைமை ஒன்று கணக்கீட்டு முறைமையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டில் காணப்பட்ட 1 வருடத்திற்கு மேற்பட்ட காலம் களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பு மீதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது 23/24 ஆண்டில் அது 62 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதாவது நிறுவனத்தால் சில காலமாக காணப்பட்ட இருப்புக்களைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் உள்ளக இருப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் மூலம் மீண்டும் ஒரு வருடத்திற்கு | இருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்பட்ட இருப்பு சேர்தல் குறைக்கப்பட்டுள்ளது. 2024.03.31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்கு மேற்பட்ட இருப்புக்களின் மொத்தமாக 6 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் அந்த இருப்புக்கள் 24/25 வருடத்தில் விற்பனை செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | பொலிஸ் விசேட படையணிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட கம்பனிக்கு உரிய ராஜகிரியவில் அமைந்துள்ள கட்டித்துடனான காணிக்காக 2024 சனவரி 01 ஆம் திகதி முதல் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது இருந்ததுடன் முன்னைய உடன்படிக்கையின் பிரகாரம் 2024 சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை கிடைக்க வேண்டிய வாடகையான ரூபா 14,400,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் உடன்படிக்கையின் 08 ஆம் பிரிவிற்கு முரணாக அனுமதியற்ற வகையில் நிலையான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தொடர்ச்சியாக எங்களால் விசேட படையணிக்கு அறிவிக்கப்பட்டதுடன் விசேட படையணியால் அனுமதியற்று நிர்மாணிக்கப்பட்டமை 2024.06.07 ஆந் திகதி நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. 2024.07.15 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் 2024.07.22 ஆந் திகதி பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அந்த காணி உரிய வகையில் இலங்கை பொலிஸ் இற்கு கையளிக்கும் வரை வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுமாறு விசேட படையணியின் கட்டளை உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | வாடகை உடன்படிக்கையை நாளது வரையாக்குவதற்கும், நிலுவை வாடகை அறவிடுவதற்கும் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நாரஹேன்பிட்ட ரஜவாச சந்தை கண்காட்சி கூட செயற்திட்டத்தின் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் | நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நெருக்கடியின் இடையே ரஜவாச வளவில் வாடகைக்கு வழங்கப்பட்ட | செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும், இலாபத் தன்மையை |

| | | | |
|---|---|---|---|
| | மாதாந்த மின்சாரப் பட்டியல், நீர்ப் பட்டியல் மற்றும் தொலைபேசிப் பட்டியல்களை உள்ளடக்கிய சேவைக் கட்டணங்கள் இரண்டாவது தரப்பினரால் செலவிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய மின்சார செலவினம், நீர்க் கட்டணமாக ரூபா 6,102,278 அதாவது செயற்திட்ட வருமானத்தில் 48 சதவீதம் கம்பனியால் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தில் இருந்து ரூபா 5,180,344 தேறிய நட்டம் பெறப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தில் 25 விற்பனை கண்காட்சி கூடங்கள் பேணிச் செல்வதற்கு இடவசதிகள் காணப்பட்ட போதும் செயற்பாட்டில் காணப்பட்ட 21 கண்காட்சிக் கூடங்களில் 11 இல் மாத்திரம் அரச நிறுவனத்திற்கு உரியதாகும். அது ‘‘அரச நிறுவனங்களின் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் விற்பனை செய்யப்படுகின்ற உற்பத்திகள் மேற்கொளள் முடியுமான விலையில் ஒரு கூரையின் கீழ் நுகர்வோர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்’’ என்ற செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கம் அடைந்து கொள்ளப்படவில்லை. | கடை உரிமையாளர்களில் அநேகமானோர் அதிலிருந்து விலகிச் சென்றதுடன் வெற்றிடமாக இருந்த கடைகள் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட போதும் வழங்குதலும் நிறைவேற்ற முடியாதிருந்தது. எனினும் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பம் முதல் பொருளாதார நிலைமை சிறப்பான நிலைக்கு வந்ததன் அடிப்படையில் வெறறிடமாக இருந்த கடைகளை வழங்குவதற்கான இயலுமை காணப்பட்டதுடன் 2023 யூலை மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரை ரஜவாச செயற்திட்டத்தின் வருமானம் அதிகரித்து இலாப நிலைமை உருவாகி இருந்தது. | அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாணடின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக திட்டமிடப்பட்ட 04 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்ட போதிலும் அடையப்பட்டிருந்த வருமான அதிகரிப்பு 50 சதவீதம் மாத்திரம் ஆகும். பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலின் அளவு அதிகரிப்பதற்காக திட்டமிடப்பட்ட 14 செயற்பாடுகளுக்கு இடையே 11 செயற்பாடுகள் அமுல் | தற்போது நிறுவனத்தில் காணப்படுகின்ற வியாபார செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் நிறுவனத்தின் வருமான இலக்கை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியான நிலைமையின் காரணமாக அந்த நோக்கத்தைக் நிறைவேற்றுதற்கு வசதியீனமாக இருந்தது. எமது நிறுவனம் அநேகமாக | நிறைவேற்றக் கூடிய பணிகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு திட்டமிட வேண்டி இருந்ததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| படுத்தப்படாது இருந்தமையால் மொத்த செயற்பாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் அளவு 21 சதவீதம் மாத்திரம் ஆகும். மேலும் பாடசாலை மாணவர்களுக்காக ஆரம்ப கணனிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கணனி சார்ந்த புதிய விடயங்களை அறிமுகப்படுத்துதல் என்ற 02 செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் முறையே 17 சதவீதம் மற்றும் 04 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது. ஆகக் குறைந்தது ஒரு தொகுதி அல்லது ஒரு வியாபாரி வெளிநாட்டு சந்தையில் உள்ளடக்கம் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதனையும் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது. | விற்பனைகள் மேற்கொள்ளல் அரச நிறுவனங்களுக்காக இருந்த போதிலும் அரச செலவின முகாமைத்துவத்திற்காக அரச நிறுவனங்களுக்காக வழங்கப்படுகின்ற நிதியேற்பாடு குறைக்கப்பட்டதன் காரணமாக அரச நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட விற்பனை நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமையால் வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் மூலம் வருமான இலக்கை அடைந்து கொள்ளுதலுக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) மற்றும் (இ) இன் பிரகாரம் நிறுவனத்தின் கொள்வனவுகள் தொடர்பாக பிரதான மற்றும் விரிவான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிறுவனத்தில் மூலதனக் கொள்வனவுகளுக்காக பெறுகை செலவின மதிப்பீடு ஒன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களுக்காக மற்றும் வியாபார இருப்புக்களுக்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் திட்டங்கள் எதிர்வரும் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முறையான பெறுகைத் திட்டம் ஒன்றைப் பின்பற்றாமல் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 3,144,025 செலுத்தி நிறுவனத்தின் திறந்த வளவில் ஒரு பகுதி தார் இட்டு காபட் இடப்பட்டிருந்ததுடன் கல்வி அமைச்சின் தேவைக்காக ரூபா 98,550,332 பெறுமதியான | குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்தில் இருந்து மேலதிக தொகை ஒன்று சேவைப் பிரிவினால் குறைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (நிதி) இடம் இருந்து ஒட்டு மொத்த | பெறுகை நடவடிக்கைகளுக்காக முறையான பெறுகை திட்ட முறைமை ஒன்று பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல் தொழில் நுட்ப உபகரணங்களும் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்தது. | பெறுகை குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறே எதிர்காலத்தில் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தனித் தனியாக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த கணக்கு அலுவலகத்தை பராமரித்தல் மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்காக பேணிச் செல்லப்படுவதுடன் நிறுவனத்தின் திறந்த வளவை தார் இட்டுக் காபட் இடுவதற்காக ஏற்பட்ட செலவினம் இந்த கணக்கு ஊடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | 2023 சனவரி 03 ஆந் திகதிய இலக்கம் அமப/22/2100/601/014/111 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் முட்டை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பெறுமதி ரூபா 496,000,000 ஆன 18,420,480 முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன் போது ரூபா 200 மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டி 2.14.1 இன் பிரகாரம் நியமிக்கப்பட வேண்டிய அமைச்சு பெறுகைக் குழுவிற்குப் பதிலாக திணைக்களப் பெறுகைக் குழுவின் மூலம் பெறுகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விடுவித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் பெறுகைகளின் போது பெறுகை வழிகாட்டி 2.4.8 இன் பிரகாரம் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமித்தல் மற்றும் வழிகாட்டி 8.9.1 இன் பிரகாரம் சேவை வழங்குனருடன் உடன்படிக்கை என்பன | சந்தையில் காணப்படுகின்ற முட்டைகளின் விலை விரைவாக உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் தற்காலிக கால எல்லைக்காக முட்டை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது குறித்துரைத்த கால எல்லை 04 இற்கு மாத்திரம் நீடிக்கப்பட்டிருந்தது. அதனால் பெறகைகள் மேற்கொள்கின்ற அளவு தொடர்பாக நிறுவனத்திற்கு வெளியில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் சந்தையின் கேள்வியின் பிரகாரம் இறக்குமதி செய்தல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த அளவை விஞ்சாது இருத்தல் மற்றும் உள்நாட்டு கேள்விக்கு ஈடுகொடுக்கும் வகையில் பெறுகைகளுக்கு உரிய மொத்த கிரய மதிப்பீடு தயாரித்தல் கஸ்டமாக இருந்தது. அதனால் பெறுகை செயற்பாடுகளின் கால வீச்சினைக் கவனத்தில் கொண்டு விரைவாக சந்தையின் கேள்விக்கு வழங்குவதற்காக நிறுவன மட்டத்திலும் திணைக்கள பெறுகைக் குழுவின் மூலமும் அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் மற்றும் அமைச்சரவையினால் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | நியமிக்கப்பட்ட நிலையான பெறகைக் குழு ஊடாக முட்டைப் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஈ) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 5,987,529 ஆன சுங்க தீர்வை இன்றிய கடைத் தொகுதிகளை பழுது பார்க்கும் பெறுகைகளுக்காக பெறுகைகள் வழிகாட்டி 2.8.4 இன் பிரகாரம் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணிகளுக்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து தேவையான போட்டியாளர் கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் இதற்கான மதிப்பீடு ஒன்று தயாரிப்பதற்காக நிறுவனத்தின் தகைமை பெற்ற உத்தியோகத்தர் இல்லாமையினால் Duty Free கடைத் தொகுதிக்கு வருகை தந்த அதனை நவீன மயப்படுத்துதலுக்காக பொருத்தமான Design அலகு ஒன்றுடன் கொள்வனவு செய்வதற்கும் கேள்வி ஒன்று சமர்ப்பிப்பதற்காக ஆர்வம் காண்பிக்கின்ற நிறுவனம் ஊடாக கேள்வி கோரப்பட்டிருந்தது. (EOI) இதற்காக தனிப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படாது இருந்ததுடன் வழங்கல் மற்றம் சேவைப் பிரிவின் முகாமையாளர், வியாபார பிரிவின் முகாமையாளர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) இனால் மாதிரிகள் மற்றும் Design தொடர்பாக தொழில்நுட்ப விடயங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி நிறுவனத்தின் கேள்விச் சபைப் பத்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறைபாடுகளை சரி செய்து கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 315 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 286 | நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற அனுமதிக்கப்பட்ட ஊழியர் திட்டம் 2012 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட அத்தியாவசியப் பதவிகளை |

பேர் ஆனமையால் அத்திகதியில் வெற்றிடங்கள் 77 ஆக காணப்பட்டதுடன் அதில் நிறைவேற்று நிலையில் 10 வெற்றிடங்கள் ஆகும். அதற்கு மேலதிகமாக 48 மிகை பதவியணியினரும் காணப்பட்டனர்.

திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து 2016 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் திட்ட பதவிகளில் 49 பேர்களுக்காக 329 பதவியணியினருக்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதில் ஈடுபடுவதலுக்கு தனிப்பட்ட பதவிகளில் ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லல் மற்றும் விலகிச் செல்வதன் அடிப்படையில் 315 ஊழியர் பதவியணியினருக்காக அங்கீகாரம் காணப்படுகின்றது.

நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.